முருகப்பெருமான் துணை

**மகான் குதம்பைச்சித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.10.2022, திங்கட்கிழமை

1. தவராஜனே ஆறுமுக அரங்கனே
   தன்னார்வத் தொண்டு வளர்த்திட
   அவதாரம் புரிந்த ஞான தேசிகனே
   அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே அனுகூல ஆசிதனை
   குறைவிலா சுபகிருது துலை திங்கள்
   தெரிவிப்பேன் சப்தம திகதி சோமவாரம்
   (சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 07 ம் நாள் 24.10.2022, திங்கட்கிழமை)
   தேசிகனுக்கு குதம்பைச் சித்தர் யானும்
3. யானும் உலகநலம் காண உரைப்பேன்
   உண்மை நெறி கொண்ட நல்ல
   ஞான வழியாம் சன்மார்க்க நெறியை
   நாடெங்கிலும் பரவும் வண்ணம் அருளிவர
4. வருகின்ற மார்க்கம் தனை மக்கள்
   வணங்கித் தொடர்ந்து வர
   தருகின்ற தாராள குணம் பெருகி
   தரணியோர் நல்ல தேற்றம் அடைவர்
5. அடையவே குருவரங்க ஞானி
   அருளுவேன் என தருகின்ற
   தடையிலா தரும வழிமுறைகளை
   தவமாக மக்களெல்லாம் ஏற்று
6. ஏற்றுமே உலகமெங்கிலும் அன்னதான
   இணையிலா தரும சேவையைச் செய்து
   ஆற்றல்பட தரும பலம் பெருக்கிட
   அகிலம் எங்கிலும் சக்தி கூடி
7. கூடியே தவதரும ஞானபலமாக
   குறைவிலா குருவருள் பலமாக
   தேடியே சர்வஞான சித்திகளும்
   தேசிகனால் அரங்கேற்றமாகவும்
8. ஆகவும் அற்புதம் நிகழ்ந்துமே
   அகிலம் ஞானத் தலைமையையும்
   மிகைபட ஞானவான்கள் நிறைந்த
   முழுமைதரும் ஞான ஆட்சி மலரும்
9. மலரும் அரங்கன் ஆசிபெற்ற
   மக்களை தயவாய் காக்கின்ற
   வளரும் கடமை தவறா ஆட்சி
   வலுப்பெறும் ஊழல் கரைபடாத வண்ணம்

10. வண்ணமுடன் அதிகார வர்க்கமுடன்
வளரும் நீதிமான்கள் சேவையாக
எண்ணம் தூய்மை தெளிவு கண்டு
எல்லா வகையும் மாற்றம் கூடி

11. கூடியே ஆறுமுகனார் ஆட்சி
குவலயத்தில் மாறுதல் தரும்படி
நாடியே ஏற்றம் தேற்றமும் காணும்
நாட்டிய அனுகூல ஆசி முற்றே

—சுபம்—